இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 23.04.2026

# சென்னையை வளப்படுத்திய தி.மு.க.!

தலைநகர் சென்னைக்காக 'சென்னை சூப்பர் 6' வாக்குறுதிகளை மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ளார்கள். தலைநகர் சென்னையை சீரமைத்ததும், வளப்படுத்தியதும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிதான். அதன் தொடர்ச்சியாகத்தான் இந்த மாபெரும் அறிவிப்பை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விடுத்துள்ளார்கள்.

**"அனைத்து வசதிகளையும் செய்து தருவோம், சிறப்பான போக்குவரத்தை வழங்குவோம், உட்கட்டமைப்பு திட்டங்களை உரிய காலத்தில் முடிப்போம், விலங்குகளின் தொல்லைகளில் இருந்து காப்போம்,உலகளாவிய சிறப்பு மையம் உருவாக்குவோம், உலகளாவிய திறமை மையமாக சென்னையை உருவாக்குவோம்" என்று வாக்குறுதிகள் அளித்துள்ளார் முதலமைச்சர் அவர்கள்.**

பாதாளச் சாக்கடைத் திட்டம் 2027க்குள் முடியும், மழை நீர் வடிகால் பணிகள் 2028க்குள் முடியும் என்பது மிகமிக முக்கியமான வாக்குறுதி ஆகும். சென்னைக்குள் மீண்டும் மினி பேருந்துகள் வரப் போகிறது. குடிநீர் வழங்கல் முறைப்படுத்தப்பட இருக்கிறது. இவை அனைத்தையும் ஒரு சேர செய்ய இருக்கிறது திராவிட மாடல் 2.0 அரசு.

பல நூறு ஆண்டு காலமாக சென்னை ராஜதானியாக இருந்த இந்த நாட்டுக்கு தமிழ்நாடு என்று பெயர் சூட்டியது பேரறிஞர் அண்ணா அவர்கள். நானூறு ஆண்டு பழமை கொண்ட இந்த சென்னை மாநகரமானது ஆங்கிலத்தில் மெட்ராஸ் என்று எழுதப்பட்டதை மாற்றி தமிழிலும் ஆங்கிலத்திலும் சென்னை என்று எழுதப்பட காரணமாக அமைந்தவர் முதல்வர் கலைஞர் அவர்கள்.

*** அண்ணா சாலை அண்ணா மேம்பாலம்**

*** கத்திபாரா பாலம்**

*** கோயம்பேடு பாலம்**

*** செம்மொழிப்பூங்கா**

*** நெம்மேலி கடல் நீரை குடிநீராக்கும் திட்டம்**

*** டைடல் பார்க்**

*** தலைமைச் செயலகமாக கட்டப்பட்டு இன்று பெரிய அரசு மருத்துவமனையாக இருக்கும் ஓமந்தூரார் மருத்துவமனை**

*** மதுரவாயல் பறக்கும் மேம்பாலம்**

*** மெட்ரோ ரயில்**

*** கோயம்பேடு காய்கறி அங்காடி**

*** கோயம்பேடு பேருந்துநிலையம்**

*** அடையாறு ஐ.டி.காரிடார்**

*** நாமக்கல் கவிஞர் மாளிகை**

*** பாடி பாலம்**

*** மீனம்பாக்கம் பாலம்**

*** மூலக்கடை பாலம்**

*** மேற்கு அண்ணாநகர் பாலம்**

*** வியாசர்பாடி பாலம்**

*** தொல்காப்பியப் பூங்கா**

*** மீஞ்சூர் - கடல்நீரை குடிநீராக்கும் திட்டம்** - இவை அனைத்தும் கழக ஆட்சியில் தலைநகருக்காக உருவாக்கித் தரப்பட்டவை.

இன்றைய சென்னையை சிங்காரச் சென்னையாக, சீர்மிகு சென்னையாக மாற்றியவர் இன்றைய முதலமைச்சர் அவர்கள் தான்.

1996 ஆம் ஆண்டு சென்னை மாநகரத்தில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் மேயராக அவர் வந்தார்.

**"சென்னை மாநகரத்தின் தந்தை என்று சொல்வதை விட இந்த மாநகரத்தின் முதல் சேவகனாக இருப்பதையே விரும்புகிறேன்"** என்று சொன்னார். **"என்னைத் தேர்ந்தெடுத்த மக்கள் தாங்கள் தவறு செய்துவிட்டோம் என்று வருந்தாத அளவிற்கு வாக்களிக்காத மக்கள் அவருக்கு வாக்களிக்கத் தவறிவிட்டோம் என்று நினைக்கக் கூடிய அளவிற்கு என் பணிகள் இருக்கும்"** என்று சொன்னார்.

சென்னை மாநகரத்தின் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க பத்து பாலங்கள் அமைக்கப்பட்டது. அந்தப் பாலங்கள் மட்டும் அன்று அமைக்காமல் போயிருந்தால் இன்றைய சென்னையே டிராபிக் ஜாம் சென்னையாகத் தான் இருந்திருக்கும். : ரூ.94 கோடி மதிப்பிலான அந்தப் பாலப் பணிகளை ரூ.61 கோடிக்குள் முடித்து 33 கோடி ரூபாயை மீதப்படுத்தி கொடுத்தார். குறிப்பிட்ட காலத்துக்கு முன்னதாகவும் முடித்துக் காட்டினார்.

மாநகராட்சி பள்ளிகள் என்றாலே கேவலமாக நினைத்த நிலையை மாற்றி, தரம் உயர்த்தினார். தனியார் பள்ளிகளைப் போல மாநகராட்சி பள்ளிகளில் இடம் கிடைப்பதும் சிரமம் என்ற சூழலையும் உருவாக்கினார். முதன் முதலாக மழலையர் வகுப்பு மாநகராட்சி பள்ளிகளில் தொடங்கப்பட்டது.

குப்பை இல்லாத சென்னையை உருவாக்கினார். திடக்கழிவு மேலாண்மைக்கு முக்கியத்துவம் கொடுத்தார். சிங்கார சென்னைத் திட்டம் அமல் ஆனது. கிளீன் சிட்டி ஆனது சென்னை. இதே போன்ற ஆர்வத்தோடு இன்றைய சென்னையையும் நவீனப்படுத்தி வருகிறார் முதலமைச்சர் அவர்கள்.

சென்னையில் கலைஞர் பன்னோக்கு மருத்துவமனை உருவாக்கப்பட்டுள்ளது. வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சார்பில் கலைஞர் நூற்றாண்டு பூங்கா திறக்கப்பட்டுள்ளது. மெட்ரோ இரண்டாம் கட்டப் பணிகளுக்கு ஒன்றிய அரசு நிதியைப் பற்றிக் கவலைப்படாமல் செயல்படுத்தி வருகிறார் முதலமைச்சர்.

இந்த வரிசையில் மிகமுக்கியமானது வடசென்னை வளர்ச்சி திட்டம் ஆகும். இதன் மூலமாக ஒட்டுமொத்த வடசென்னைக்கும் ஏராளமான வளர்ச்சித் திட்டங்கள் செய்து தரப்பட்டு வருகின்றன.

**சென்னை மற்றும் பிற மாவட்டங்களில் வெள்ளத்தணிப்பு பணிகள் ஆயிரத்து 640 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டதால் வெள்ள நீர் பாதிப்பிலிருந்து தடுக்கப்பட்டது. சென்னை மாநகரத்தின் பெருகிவரும் குடிநீர்தேவையை கருத்தில் கொண்டு மாமல்லன் நீர் தேக்கம் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் மற்றும் திருக்கழுக்குன்றம் வட்டங்களில் கிழக்கு கடற்கரைச் சாலைக்கும் (ECR) பழைய மகாபலிபுரம் சாலைக்கும் (OMR) இடையில் உள்ள கோவளம் உபவடிநிலத்தில் இந்த புதிய நீர்த்தேக்கம் அமைய உள்ளது.**

**மிக வேகமாக வளர்ந்து வரும் பகுதிகளான சோழிங்கநல்லூர், மேடவாக்கம், பள்ளிக்கரணை, சிறுசேரி, கேளம்பாக்கம், திருப்போரூர், மாமல்லபுரம் ஆகிய பகுதிகளில் வசிக்கும் 13 லட்சம் மக்களுக்கு குடிநீர் வழங்க இயலும். இத்திட்டத்தினால் சுற்று வட்டாரத்தில் உள்ள திருவிடந்தை, கோகில மேடு, மாமல்லபுரம், திருப்போரூர் தண்டலம், பையனூர் ஆகிய பகுதிகளில் நன்னீரை தேக்கி கடல் நீர் உட்புகுதலை தடுத்து நிலத்தடி நீரின் மட்டம் மற்றும் அதன் தரம் மேம்படும். சென்னை மக்களுக்கான மாபெரும் திட்டம் இது.**

**இதன் தொடர்ச்சியாகத்தான் 'சென்னை சூப்பர் 6' திட்டத்தை அறிவித்துள்ளார் சூப்பர் முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள்.**

## கழக முன்னாள் பொருளாளர்

# ஆர்க்காடு வீராசாமி பிறந்த நாள்!

## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

**சென்னை, ஏப்.23 -**

**கழக முன்னாள் பொருளாளர் ஆர்க்காடு வீராசாமி அவர்களின் பிறந்த நாளையொட்டி, நேற்று முன்தினம் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளார்.**

இதுகுறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளதாவது:-

**தலைவர் கலைஞர் அவர்களின் ஆருயிர்த் தம்பியாய் இருந்து கழகத்துக்காக உழைத்த தீரர், என் அன்பு அண்ணன் ஆர்க்காட்டார் அவர்களுக்கு மனம்நிறைந்த பிறந்தநாள் வாழ்த்துகள்.**

**அடுத்து அமையவுள்ள திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலும் தங்களது வழிகாட்டுதலும் வாழ்த்தும் தொடர வேண்டும் என விழைகிறேன்.**

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.





கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (21.4.2026) முன்னாள் கழக பொருளாளரும், முன்னாள் அமைச்சருமான ஆற்காடு வீராசாமி அவர்களின் பிறந்தநாளையொட்டி அவரது இல்லத்திற்கு நேரில் சென்று அவருக்கு பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்தார். உடன் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி உள்ளார்.

## திருச்செந்தூர் மேம்பாட்டுக்கு தனி ஐ.ஏ.எஸ். அதிகாரி:

# திருப்பதிக்கு இணையாக திருச்செந்தூரை உருவாக்குவோம்!

## கனிமொழி கருணாநிதி எம்.பி. தேர்தல் பரப்புரையில் உறுதி!

திருச்செந்தூர், ஏப். 23-

தேர்தல் பரப்புரையின் இறுதிநாளான ஏப்ரல் 21 ஆம் தேதி கழக துணைப் பொதுச் செயலாளரும், தூத்துக்குடி எம்.பி.யும் நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி திருச்செந்தூர் தொகுதியில் கழக வேட்பாளரான அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணனை ஆதரித்து பரப்புரை செய்தார்.

அப்போது அவர் திருச்செந் தூருக்கு தி.மு.க. ஆட்சியில் செய்யப்பட்ட நன்மைகளையும் செய்யப் போகும் திட்டங்களையும் பட்டியலிட்டு அறிவித்தார்.

கனிமொழி கருணாநிதி எம்.பி. பேசும்போது,

"அடுத்த ஜென்மம் என்று ஒன்று இருந்தால் உங்கள் குடும்பத்தில் ஒருவனாக பிறக்க வேண்டும்" என்று எடப்பாடி பழனிசாமி எடப்பாடியில் நடந்த பிரச்சா ரத்தில் பேசியிருக்கிறார். எனக்கு அடுத்த ஜென் மத்திலெல்லாம் நம்பிக்கை இல்லை.

அவருக்கு ஒரு வேளை இருந்தாலும், அடுத்த ஜென்மத்தில் அவர் தமிழ்நாட்டில் பிறக்க வேண்டாம். குஜராத்தில் பிறக்கட்டும். அதுவும் கொஞ்சம் முதுகெலும்போடு பிறக்கட்டும். திருச்செந்தூருக்கு நமது முதல்வர் முத்துவேல் கருணா நிதி ஸ்டாலின் தலைமையிலான



ஆட்சியில் பல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

திருச்செந்தூர் கோயிலுக்கு நமது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்தான் கும்பாபிஷேகம் செய்யப்பட்டிருக்கிறது. திருசெந்தூர் நகராட்சிக்கு குடிநீர் கொண்டு வருவதற்கான திட்டம் போடப்பட்டு நிதி ஒதுக்கிடு செய்யப்பட்டு இருக்கிறது. அதற்கான பணிகள் ஆரம்பித்து விட்டது, விரைவில் தண்ணீர் கொண்டு வரப்படும்.

148 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஜீவா நகர், அமலி நகர், ஆழந்தலை, வீரபாண்டிய பட்டிணம், மனப்பாடு, புன்னக்காயல் ஆகிய பகுதிகளிலே மீன்பிடி இறங்குதளம் மற்றும் புன்னக்காயல் அமலி நகர் பகுதிகளிலே தூண்டில் வளைவுகளும் அமைக்கப்பட்டுள்ளது நம்முடைய ஆட்சியில். மணப்பாடு கடற்கரையில் கரை பலப்படுத்தும் பணிகள் முடிவடைந்திருக்கிறது.

நம்முடைய திருச்செந்தூர் கடற் கரையில் சில நேரம் கடல் உள்வாங்கு கிறது. அதை சரி செய்வதற்கு தூண்டில் வளைவு இல்லாமல் புதிய முறையில் கரையை பாதுகாப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறது. அந்த பணிகளும் விரைவிலே தொடங்கப்படும்.

14 ஆயிரத்து 572 கோடி மதிப்பீட்டில் உடன்குடி அனல்மின் நிலையம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் திருச் செந்தூர், காயல்பட்டினம் நகராட்சிகளில் 45 கோடி மதிப்பீட்டில் குடிநீர், தெருவிள க்கு அமைத்தல் சாலை வசதிகள், பூங்காக்கள், விளையாட்டு திடல்கள் நீர்நிலை கள் சரி செய்வது, திடக்கழிவு மேலான்மை பணிகள் என்று அத்தனையும் நடை பெற்று வருகிறது.

இதைத்தாண்டி திருச்செந்தூருக்கு ஒவ்வொரு நாளும் லட்சக்கணக்கான மக்கள் கோயிலுக்கு வந்து கொண்டு இருக்கிறார்கள். அதனால் இங்கே இருக்கக் கூடிய பாதாள சாக்கடைத் திட்டம் உள்ளூர் மக்களுக்கு போதுமானவையாக இருக்கின்றன. வரக் கூடிய மக்களையும் கணக்கிலெடுத்துக் கொண்டு பாதாள சாக்கடைத் திட்டம் அமைக்கப்படும்.

திருச்செந்தூருக்கு எத்தனை லட்சம் மக்கள் வந்தாலும் அவர்களுக்கும் சேர்த்து நம்முடைய அடுத்த ஆட்சியில் எல்லா அடிப்படை வசதிகளும் மறுபடியும் மிகச் சிறப்பாக பெரிய அளவிலே செய்து தரப்படும். இந்த பணிகளுக்காக திருச்செந்தூருக்கென தனியாக ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி நியமிக்கப்பட்டு அவர் தலைமையில் இந்த பணிகள் நிறைவேற்றித் தரப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் உறுதியளித்திருக்கிறார்.

திருச்செந்தூர் கோயிலில் கும்பாபிஷேகம் நடைபெற்றதும் மேலும் பலர் வர ஆரம்பித்துவிட்டார்கள். அதனால் நாம் மீண்டும் ஆட்சிக்கு வந்ததும் திருப்பதிக்கு இணையான அனைத்து வசதிகளும் திருச்செந்தூரில் உருவாக்கித் தரப்படும் என்பதை உங்களுக்குஉறுதியாககூறுகிறோம். இதையெல்லாம் செய்து தருவதற்கு முதலமைச்சருக்கு நீங்கள் மீண்டும் வாய்ப்பு அளிக்கப் போகிறீர்கள். அமைச்சர் அனிதா ராதா கிருஷ்ணனுக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களிக்கப்போகிறீர்கள் என கனிமொழி கருணாநிதி எம்.பி. உரையாற்றினார்.